**<u>அசல் வழக்கு எண்.2/2019</u>**

**<u>தேதி: 08.07.2025.</u>**

**<u>வா.சா.2:</u> திரு. நடராஜன், த/பெ. பச்சயப்ப பிள்ளை**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

நான் தான் கிரைய ஒப்பந்தத்தை முன்னின்று பேசி முடித்தது என்றால் சரிதான். பிரதிவாதிகளை எனக்கு முதலில் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, முதலிலேயே எனக்கு தெரியும். வாதியே என்னிடம் சென்னையை சேர்ந்த அப்துல் கபூர் என்பவர் அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு வாதியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகு வாதி என்னென்ன தொழில் செய்கிறார் என்ற விவரத்தை தெரிந்துக் கொண்டேனா என்றால் தெரிந்துக் கொள்ளவில்லை, அப்துல் கபூர் பற்றி தான் எனக்கு தெரியும்.

வாதி சொத்தை வாங்குவதற்கு போதுமான வசதியுடையவரா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அப்துல் கபூர் தான் என்னிடம் வசதியானவர் என்று சொன்னார். 10.04.2017 அன்று முதலில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், முதலில் 50 லட்சம் ரூபாய் கட்டினார். அந்த 50 லட்ச ரூபாயை வாதி ஒரே தவணையில் கட்டினாரா அல்லது வெவ்வேறு தவணைகளில் கட்டினாரா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

நான் சொல்வது போல் அப்துல் கபூர் முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்டாரா என்றால் போட்டார், நான் 2வது கிரைய ஒப்பந்தத்தில் தான் சாட்சி கையொப்பம் போட்டேன். முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தை பற்றி எனக்கு ஓரளவு தான் தெரியும், எனக்கு படிக்கத் தெரியாது.

என்னிடம் யாராவது படித்து காண்பித்தார்களா அல்லது படித்து காண்பிக்கவில்லையா என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகமில்லை. முதலில் போட்ட கிரைய ஒப்பந்தம் மொத்தம் எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தை யார் எழுதினார்கள் என்றால் பணம் கொடுத்தவர்கள் தான் எழுதிக் கொண்டு வந்தார்கள். முதலில் போட்ட கிரைய ஒப்பந்த்தில் சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்துக்களின் அசல் பத்திரங்களையும், அதற்கான அனைத்து மூல தஸ்தாவேஜ்களையும் நாங்கள் இன்றைய தேதியில் தங்களிடம் ஒப்படைத்து விட்டோம் என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்திலேயே ஆவணங்களை அனைத்தும் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் சொத்துக்கள் குறித்து சட்ட ஒப்புதல் பெற்று கிரையம் பெற வேண்டியது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையொப்பங்கள் போட்டார்கள் என்றால் அப்துல் கபூர் மற்றும் ரத்தினவேலின் மகன் மற்றொரு சாட்சி கையொப்பம் போட்டனர்.

நான் சென்னையைச் சேர்ந்த அப்துல் கபூர் என்பவர் மூலம் வாதி பிரதிவாதிகளிடம் பேசி கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது தவறு என்றாலும், நான் முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தின் போது இல்லை என்றாலும் சரியல்ல, நான் உடன் தான் இருந்தேன். முதலில் போட்ட கிரைய ஒப்பந்தத்தை பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்றாலும், தற்போது இந்த வழக்கிற்காக அனைத்தும் தெரிந்தது போல் பேசுகிறேன் என்றாலும் சரியல்ல.

முதல் கிரைய ஒப்பந்தத்தில் எவ்வளவு கால கெடு கொடுக்கப்பட்டது என்றால் 3 மாத காலத்திற்கு மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையம் செய்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி, ஜீலை மாதம் 10ஆம் தேதிக்குள் கால கெடு முடிந்துவிட்டது என்றால் சரிதான். அந்த 3 மாத காலத்திற்குள் கிரையம் செய்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான், வாதி தயாராக இருந்தார், பிரதிவாதிகள் தான் சொத்துக்களுக்கான தஸ்தாவேதுகளை கொடுக்கவில்லை.

நான் சொல்வது பொய் என்றாலும், அந்த கிரைய ஒப்பந்தத்திலேயே சொத்திற்கான அசல் தஸ்தாவேஜ்களை கொடுத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 27.07.2017 அன்று இரண்டவாது கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். 2வது கிரைய ஒப்பந்தம் ஏற்படும் போது தான் நான் இருந்தேன் என்றால் நான் இருந்தேன், அதில் சாட்சி கையொப்பமும் போட்டுள்ளேன். அதில் அப்துல் கபூர் சாட்சி கையொப்பம் போடவில்லை. யார் யார் சாட்சி கையொப்பங்கள் போட்டார்கள் என்றால் நான், விஜயராகவன் ஆகியோர் சாட்சி கையொப்பங்கள் போட்டுள்ளோம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.